<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>இரண்டாம் கட்ட கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள்</u>

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இந்திய அரசியலமைப்பு (97வது திருத்தம்) சட்டம், 2011, பிரிவு 243 ZK மற்றும் 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், பிரிவு 33 – A–ன் படி தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டு, 08.02.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

2013–ல் தேர்தல்கள் நடத்தப்பட்டு 2018–ம் ஆண்டில் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த 18775 சங்கங்களுக்கு தேர்தல் நடத்த ஆணையத்தால் திட்டம் வகுக்கப்பட்டது. தொடக்க நிலைச் சங்கங்கள், மத்திய சங்கங்கள், தலைமைச் சங்கங்கள் என்ற 3 அடுக்கு முறையில் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு உள்ளதால், அதனை 5 கட்டங்களாக தேர்தல் நடத்தவும் திட்டமிடப்பட்டது. அவற்றில் தொடக்கநிலைச் சங்கங்களான 18465 சங்கங்களுக்கு 13.03.2018 முதல் 28.04.2018 வரை 4 நிலைகளாக தேர்தல் நடத்துவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் ஆணைப்படி அனைத்து தேர்தல் நடவடிக்கைகளும் ‘உள்ளது உள்ளபடி’ நிறுத்தப்பட்டன.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் ஆணையினை எதிர்த்து ஆணையம் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ததின் அடிப்படையில், மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற முதன்மை அமர்வு ஆணைகளின் பேரில், விதிக்கப்பட்ட தடைகள் விலக்கப்பட்டு, மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற முதன்மை அமர்வு முன்பிருந்த வழக்குகள் தொடர்பான சங்கங்கள் தவிர்த்து இதரச் சங்கங்களின் தேர்தல்களை நடத்தி முடிவு அறிவிக்கலாம் என ஆணையிட்டது. அதன் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அனைத்து தொடக்க நிலைச் சங்கங்களின் தேர்தல்கள் 07.09.2018 அன்று முடிவுற்று புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவி ஏற்றுள்ளனர்.

தற்போது இரண்டாம் கட்டத்தில் 113 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், 12 மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்கள், 14 மாவட்ட நெசவாளர் கூட்டுறவு இணையங்கள் மற்றும் 6 கூட்டுறவு நூற்பாலைகள், 8 மாவட்ட பனைபொருள் கூட்டுறவு இணையங்கள், 10 சிறுதொழில் உற்பத்தியாளர்கள் சேவை கூட்டுறவு சங்கங்கள், 1 மகளிர் குடிசைத் தொழில் மத்திய கூட்டுறவு சங்கம், மற்றும் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஆக மொத்தம் 197 சங்கங்களுக்கு தேர்தல் திட்டம் வழங்கப்படுகிறது. மாவட்ட தேர்தல் அலுவலர்கள் இதற்கான தேர்தல் அறிவிப்பினை வெளியிடுவர். அதன்படி 197 சங்கங்களின் 2448 நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் நடைபெற உள்ளன. அவற்றில் 682 இடங்கள் பெண்களுக்கும், 438 இடங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## வேட்பு மனு தாக்கல்

இதற்கான வேட்பு மனுத்தாக்கல் 06.10.2018 அன்றும் பரிசீலனை 08.10.2018 அன்றும், திரும்பப்பெறுதல் மற்றும் இறுதி வேட்பாளர் பட்டியல் 09.10.2018 அன்று வெளியிடவும் போட்டியிருப்பின் 11.10.2018 அன்று வாக்குப்பதிவும், வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவு அறிவித்தல் 12.10.2018 அன்றும் நடைபெற உள்ளன.

## தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்

நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் 16.10.2018 அன்று சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல்கள் நடைபெறும்.

இரண்டாம் கட்டத்தில் தேர்தல் நடைபெறவுள்ள இச்சங்கங்களின் பெயர் விவரங்கள் ஆணையத்தின் இணைய தளத்தில் ( www.coopelection.tn.gov.in) தரப்பட்டுள்ளன.

முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
தேர்தல் ஆணையர்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18
தேர்தல் திட்டம் 2018 (இரண்டாம் கட்டம்)
(தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988, விதி எண். 52 (5 )- ன் கீழ்)

| வ. எண் | விவரங்கள் | நாள் |
|---|---|---|
| 1. | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அறிவிப்பு வெளியிடும் நாள் | 19.09.2018 |
| 2. | சங்கம் உறுப்பினர் பட்டியலை சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 24.09.2018 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்க உறுப்பினர் பட்டியல் அளிக்க வேண்டிய நாள் | 24.09.2018 |
| 4 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 25.09.2018 |
| 5 | வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு சங்கம் உறுப்பினர் பட்டியல் அளிக்காத நேர்வில் வாக்காளர் பட்டியல் அலுவலர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 25.09.2018 |
| 6 | வாக்காளர் பட்டியலுக்கு உறுப்பினர் கோருரிமை அல்லது மறுப்பு தெரிவிக்கும் நாள் | 27.09.2018<br>நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 7 | வாக்காளர் பட்டியலுக்கு கோருரிமை அல்லது மறுப்பு தெரிவித்தது குறித்த வாக்காளர் பட்டியல் அலுவலரின் முடிவுகள் சங்க அறிவிப்பு பலகையில் வெளியிடும் நாள் | 03.10.2018<br>நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 8 | வாக்காளர் பட்டியல் அலுவலர் சங்க அறிவிப்பு பலகையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் | 03.10.2018<br>நேரம் : 5 பி.ப |
| 9 | வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாள் | 06.10.2018<br>நேரம் : 10 மு.ப முதல் 5 பி.ப |
| 10 | வேட்பு மனு பரிசீலனை | 08.10.2018<br>நேரம் : 11 மு.ப முதல் 4 பி.ப |
| 11 | செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 08.10.2018<br>நேரம் : 5 பி.ப |
| 12. | வேட்பு மனு திரும்பப் பெறுதல் | 09.10.2018<br>நேரம் : 10 மு.ப முதல் 4 பி.ப |
| 13 | போட்டியிடும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 09.10.2018<br>நேரம் : 5 பி.ப |
| 14 | தேவைப்படும் நேர்வில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | 11.10.2018<br>நேரம் : 8 மு.ப முதல் 5 பி.ப |
| 15. | ஓட்டு எண்ணுகை மற்றும் தேர்தல் அலுவலரால் தேர்தல் முடிவு அறிவித்தல் | 12.10.2018<br>நேரம் : 10 மு.ப முதல் |
| 16. | தலைவர் / துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்ட அறிவிப்பு நாள் | 12.10.2018<br>(நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன்) |
| 17 | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் நாள் | 16.10.2018<br>நேரம் : 10 மு.ப முதல் |

ஆணையர்

Scanned by CamScanner